திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூந்தமல்லி நகர திமுக சார்பில் ஆலோசனைக் கூட்டம் நகர கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு நாசர் கலந்து கொண்டு இன்று திருவள்ளூர் மாவட்டத்திற்கு கழகத் தலைவர் அவர்கள் வருகை தருவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ, சி. ஜெரால்டு, எஸ். ஜெயபாலன், காயத்திரிஸ்ரீதர், பா.நரேஷ்குமார், காஞ்சனா சுதாகர், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.சங்கர், க.ஸ்ரீதர், நகர நிர்வாகிகள், பூவை எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர்ஸ்டாலின் டில்லிராணி மலர்மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா. புண்ணியகோட்டி, ப.அன்பழன், சௌந்தரராஜன், ராஷிக், நெல்சன் உள்பட பலர் உள்ளனர்.

கழகத் தலைவர் - முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு

"அன்னம் தரும் அமுதகரம்" 57-வது நாள்!

எழும்பூர் வடக்கு / தெற்கு பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப்.18-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 57 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (17.4.2025) எழும்பூர் வடக்கு பகுதி 1) வட்டம் 78 - மூக்குத்தெரு கொசப்பேட்டை, சென்னை. 2) எழும்பூர் தெற்கு பகுதி வட்டம் 58- நேவல் மருத்துவமனை சாலை, பெரியமேடு சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்

துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ் நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், சொ.வேலு, வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள்: B.சுமதி, பி.எம். யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், சுதா தீனதயாளன், பரிதிஇளம்சுருதி, பி. அபாய், டி. தயாளன், நா.பாலு, சு. மோகன், ஆர்.எம்.ரங்கநாதன் எழும்பூர் வடக்கு/தெற்கு பகுதி செயலாளர்கள்: தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், வி. விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன் இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், லண்டன் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு – முன்னிலை டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, தலைமை!

அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!

அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் கர்ப்பிணி பெண்களுக்கு நல உதவிகளை வழங்கினார்!

சென்னை,ஏப்.18-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 55, சுமக்கும் பெண்மை சுகம்பெறட்டும்! சூரிய அணியில் இடம்பெறட்டும்!! எனும் தலைப்பில் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் கர்ப்பிணி பெண்களுக்கு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 17.04.2025 வியாழக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, அம்பத்தூர், அருள் ஜோதி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில், சென்னை கிழக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர், தலைவர் -நிலைக்குழு பொது சுகாதாரம் டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் மாண்புமிகு பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநக ராட்சி மேயர் பிரியா ராஜன், அம்பத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, எல்.பி.எப்.மோகன், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன், க.முரளி பாபு, அ.செல்வம், க.கதிஜா, மா.ரமேஷ், வெ.ரவீந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வி.இராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, க.பொற்கொடி எம்.சி, எம்.இ.சேகர் எம்.சி, எஸ்.உமா எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி முன்னிலை வகித்தனர்.

டாக்டர் பெ.வெற்றிகுமார்,டாக்டர் எம்.ஜெ. திவ்யானந்தன், டாக்டர் இ.வினோத், டாக்டர் வி.சுதர்சன், டாக்டர் இ.வினேஷ், டாக்டர் பெ.பூபாலன், டாக்டர் வி.ஜி. சந்தோஷ்ராஜ், டாக்டர் கே.ஜே. சுவாதி ,டாக்டர் கோ. சந்தோஷ் குமார், டாக்டர் எச். பிரத்யுஷா ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில், மாநில மகளிர் அணி துணை செயலாளர், மாண்புமிகு மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் - கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் அம்பத்தூர் வடக்கு / தெற்கு, கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: மு.நடராஜன்,து.செல்வராஜ், ஆர்.கதிரவன், எஸ்.கவிதா, செல்லதுரை, கு.சங்கர்,து.ஜெகநாதன், பி. ஆர்.இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ.ராமு, அம்பத்தூர் தெற்கு, கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், நா.நெப்போலியன், இரா.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால். அம்பத்தூர் வடக்கு ,கிழக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: க.ஜீவா, மா.குப்புசாமி, பி.வி.மூர்த்தி, பொன்.நவராஜ் ரவி, எஸ்.பி.அரிகிருஷ்ணன், எம்.ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி, ஆ.இரா. அருண், கோ.சேகர்லால், பொ.சேதுராமன்(எ)பொன் சேட்டு, ஏ.கே.டி.பாஸ்கர், ஆர். ஜெயராமன், சோ.மதியழகன், எஸ்.எஸ்.சவரிமுத்து, பா. மாறன், டி.சுரேஷ்பாபு, எஸ். கே.சதீஷ்குமார், எஸ்.எம்.முருகானந்தம், ஏ.வி. தட்சிணாமூர்த்தி, கே.செல்வம், கோ.முத்துகுமாரசாமி, கோ.ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கோ.இன்பசேகரன், இ.நடராஜன், ஆர்.விமலன்,ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம். தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்: டாக்டர்கள் எஸ்.ஷரவன் குமார், ஆர். கார்த்திகேயன், இ. பிரியதர்ஷினி, சி.என். தருண்குமார், எஸ்.தயாபிரசாந்த், கு. கீர்த்திவர்மன், எம். சேதுமாதவன் பி.அமுதா,என்.கே. யுவராஜ், எம். சுரேஷ்சந்த், கே. ராகுல் கணேஷ், டாக்டர் எம். தமிழரசி, சி.அமுலு ,எஸ். ராஜேந்திரன், ஜெ. குமரவேல், வி. கௌதம், எஸ். செல்வி, கே. ராஜ்குமார், எம். மதியழகன் டாக்டர் எல். ஜெய்லான்ஸ், டாக்டர் எம்.இ.சந்தீப், டாக்டர்.எஸ்.பிரவின் குமார், எ.நாதன். மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள்: கு.வேணுகோபால், பக்கீர்மொய்தீன், கே.எஸ். வரதராஜன், பிரவீன்குமார், பிரகாஷ் ஆனந்த், மோகன்பாபு, என்.மோகன், ஆர்.செல்வம், இரா.ராதாகிருஷ்ணன், தமிழ் செல்வன், யு.இலக்கியா, பி. பாலாஜி, கே.அன்பரசு, மரியகலைசெல்வன், எஸ்.ஜெஸ்டின் பிரபு, எஸ்.ஜெயபாலன், ஆர். எம்.இளங்கோ, எஸ்.சிவசண்முகம், ஆ.பிரகாஷ், ச.கோவிந்த், இரா.பால சுந்தர், எஸ்.துரைகணேஷ், கே.பிரகாசம், ரா. மகேஷ்வரி, ஸ்னோபகிருஷ்ணமூர்த்தி, ஆசைஆரோக்கியம், தில்மகேஷ், அசோக்ஆண்ரூஸ், எம்.பாலகிரு ஷ்ணன்[எ]அண்ணாதுரை, சா.ஜெகநாதன்,டி.

கோடை வெயிலை முன்னிட்டு பொதுமக்களின் தாகம் தீர்க்கும் வகையில் தி.மு.க. சார்பில் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., தலைமையில். 5 வது வட்ட செயலாளர் கே.பி.சொக்காலிங்கம் ஏற்பாட்டில் திருவொற்றியூர் விம்கோ நகரில் பொதுமக்களுக்கு தர்பூசணி, இளநீர், மோர், உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். இதில் வி.ராமநாதன், இரா.முருகேசன், பி.தமிழரசன் (எ) தம்பியா எம்.சி., எஸ். டி. சங்கர், ஆர்.விவேகானந்தன், ஆர்.சந்துரு, கே. சந்தோஷ் குமார், இ.ரமேஷ், இ.குமரவேல், வி.கே.ஏழுமலை, வி.தியாகராஜன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, ஆர். டி.மதன்குமார், வாசு கருணாநிதி, டைலர் மணி, வி.ராமசாமி, எ.ராஜேந்திரன், ஆர்.மணிமாறன். எம்ஆர்எப்.ஜான், வி.புண்ணியமூர்த்தி, கே.தேசிங், டி.அல்லிமுத்து, எஸ்.செல்வம், பாலா உமாபதி, கே.கார்த்திகேயன், ஆர். வி.ராமையா, ஜெபா. சத்யா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

எழும்பூர் தொகுதி, மண்டலம் 6, வார்டு எண்.78, வீ.வீ.கோவில் தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் 3.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிக்காக அங்குள்ள பழைய சித்த மருத்துவ மருந்தகக் கட்டிடத்தை இடிக்கும் பணியைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஆய்வு செய்தார்.

தியாகராயர் நகர் 130வது வட்டத்தில் வடபழனி சிம்ஸ் அருகில் அமைக்கப்படும்

பூங்காவில் கிரிக்கெட் பயிற்சி வலைதளம் அமைத்திடுக!

சட்டப்பேரவையில் – ஜெ.கருணாநிதி வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.18-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது தியாகராயர் தொகுதி உறுப்பினர் ஜெ.கருணாநிதி கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு: -

தியாகராய நகர் தொகுதி, 130வது வார்டு, வடபழனியில் SIMS மருத்துவமனைக்கு அருகில் உள்ள மாநகராட்சிப் பூங்காவை மேம்படுத்த அரசு முன்வருமா?

அமைச்சர் கே.என். நேரு: பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டலம், 130வது கோட்டத்திற்குட்பட்ட வடபழனி SIMS மருத்துவமனைக்கு அருகில் உள்ள மாநகராட்சிப் பூங்காவில் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பல்வேறு வசதிகளை ஏற்படுத்துவதற்கான பணிகள் எடுக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன.

ஜெ. கருணாநிதி: தியாகராய நகர் தொகுதி, 130வது வார்டு, வடபழனியில் SIMS மருத்துவமனைக்கு அருகில் உள்ள மாநகராட்சிப் பூங்காவை சீரமைப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது அந்தப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. அதற்காக மாஅமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தப் பகுதி மக்கள் இப்போது கூடுதலாக அந்த மாநகராட்சி இடத்திலேயே கிரிக்கெட் பயிற்சி வலைதளம் அமைத்துத் தருமாறும், carrom board அறை அமைத்துத் தருமாறும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என். நேரு: பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டலம், 130வது கோட்டத்திற்குட்பட்ட வடபழனி SIMS மருத்துவமனைக்கு அருகில் உள்ள 2,010 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மாநகராட்சிப் பூங்காவை மேம்படுத்துவதற்காக தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியி

லிருந்து ரூ.75 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையில் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் கபடி, கிரிக்கெட், கைப்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுகள் விளையாடுவதற்கும், யோகா மற்றும் உடற்பயிற்சி செய்வதற்கும், சிறுவர் விளையாட்டுக் கருவிகள், பூச்செடிகள் நடைபாதை மற்றும் 2 கழிவறைகள் ஆகிய வசதிகளை ஏற்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவையனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. மேற்படி பணிகளை 30.4.2025 க்குள் முடிக்க வாய்ப்புள்ளது.

ஜெ. கருணாநிதி: அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சென்னை மாநகராட்சி, 10வது மண்டலத்திலுள்ள அனைத்துப் பூங்காக்களிலும் மராமத்துப் பணிகள் தற்போது மாநகராட்சி மூலமாக தினக்கூலி அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இந்தப் பூங்காக்களின் மராமத்துப் பணியை மேற்கொள்ள தனியார்வசம் ஒப்படைக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வார்டு 130, 132, 135 மற்றும் 141 ஆகிய பகுதிகளிலுள்ள மழைநீர் வடிகால்கள் சுமார் 25, 30 ஆண்டுகளுக்கு முன்பாக 2 அடி கால்வாயாக கட்டப்பட்டுள்ளது. இப்போது அந்த மழைநீர் வடிகால்கள் பழுதடைந்த நிலையிலும், சேதமடைந்தும் உள்ளன. ஆகவே, அதை மாற்றி புதிதாக 3 அடி அல்லது 4 அடி அகலமான மழைநீர் வடிகால்கள் கட்டித் தரப்படுமா என அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் கே.என். நேரு: சென்னை மாநகராட்சியில் 2021-ஆம் ஆண்டிற்கு முன்பு 704 பூங்காக்களும், 610 விளையாட்டு அரங்கங்களும் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வந்தன. கடந்த 4 ஆண்டுகளில் 204 பூங்காக்கள், 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. 307 பூங்காங்கள் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஆக, தற்போது சென்னையில் 908 பூங்காக்களும், 724 விளையாட்டு அரங்கங்களும் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.

தற்போது 32 புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள் ரூபாய் 8 கோடி மதிபீட்டில் நடைபெற்று வருகின்றன. 2025-2026-ஆம் ஆண்டில் 30 புதிய பூங்காக்கள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளன. மேலும் 273 பூங்காக்கள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளன. எனவே, உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியிலே குறிப்பிட்டு ஏதாவது ஒன்றைச் சொன்னால் அதற்கு முன்னுரிமை தந்து எடுத்துக் கொள்ளலாம்.

இரண்டாவது, மழைநீர் வடிகாலைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார். ஆணையர் அவர்களும் இங்கே வந்திருக்கிறார்கள். அது பற்றி அவரிடம் கலந்தாலோசித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கெனவே, மழைநீர் வடிகாலுக்காக முதலமைச்சர் அவர்களால் சென்னையில் 2 ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் நிதி செலவு செய்யப்பட்டு, பல்வேறு பணிகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இப்போது புதிதாக, ஏற்கெனவே பழைய மழைநீர் வடிகால்களை திருத்தி அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அந்த வகையில் உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததையும் கவனத்திலே கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, இந்த வடிகால்களை சரிசெய்வதற்குரிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில்

100 சிசிடிவி கேமராக்கள் பொருத்த ஒப்புதல்!

சென்னை, ஏப். 18 -

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கூடுதலாக 100 சிசிடிவி கேமராக்கள் பொருத்த ரயில்வே நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே காவல் அதிகாரிகள் கூறியதாவது: சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பாதுகாப்பு பணிகளில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த நிலையத்தில் 90 க்கும் மேற்பட்ட சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. கஞ்சா, குழந்தை கடத்தல், செல்போன், நகை திருட்டு உள்ளிட்ட குற்றச்செயல் சம்பவங்களில் ஈடுபடுவோரை விரைந்து பிடிக்க சிசிடிவி கேமராக்கள் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

அந்த வகையில், மேலும் 100 கேமராக்களைப் பொருத்த கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரயில்வே நிர்வாகத்திடம் பரிந்துரை செய்யப்பட்டது. நடைமேடைகள், நுழைவுப் பகுதிகள், பார்சல் சர்வீஸ் வளாகம் மற்றும் அருகில் உள்ள புறநகர் மின்சார ரயில் நிலையத்தின் சில பகுதிகளையும் தேர்வு செய்து பட்டியல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், 100 கேமராக்கள் பொருத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அடுத்த ஓரிரு மாதங்களில் இந்த புதிய கேமராக்கள் பொருத்தி, கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்துவோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

காரைக்கால் மாநில திமுக பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தொகுதி கழக அமைப்பாளர்கள் துணைய அமைப்பாளர்களுக்கான நேர்காணல் கடந்த 12.4.2025 அன்று காரைக்காலில் நடைபெற்றது. இதில் பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் ஆர்.வி.எல். ரவிச்சந்திரன் பொறியாளர் அணிக்கான மாநிலக் கழக தொகுதி கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணலை நடத்தினார். இதில் ஏ.எம்.எச். நாஜிம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். தியாகராஜன் முன்னிலை வகித்தார். இதில் அன்சாரி, சீனிவாசன், அம்பை சரவணன், பா. பெரியார் ஜவகர், வீரதாசன், பார்த்திபன், ஜாகிர் உசேன், ஜாபர் அலி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், புவனகிரி சட்டமன்றத் தொகுதி, வாழக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி இரா.கலைச்செல்வன் – மாலதி ஆகியோரின் மகள், TNPSC Group 1 தேர்வில் தமிழகத்தில் முதலிடம் பெற்று சாதனை புரிந்துள்ள செல்வி க. கதிர்செல்வியை புவனகிரி மற்றும் சிதம்பரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரை.கி. சரவணன் நேரில் அவரது இல்லத்திற்குச் சென்று பொன்னாடை அணிவித்து புத்தகங்கள் கொடுத்து வாழ்த்துகள் தெரிவித்தார், உடன் டி.திருமூர்த்தி , சுதா சம்பத், பாண்டியன், செந்தில் ராயன், தமிழ்ச்செல்வன், அஞ்சம்பாள்,, இராமதாஸ் , சுகுமார், குறளரசன், மற்றும் பலர் உடன் இருந்தனர்.